கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 139 | 24-11-2025 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 139 | 24-11-2025 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## டெல்லி கார் வெடிப்பில் அடையாளம் காணப்படாத 3 உடல்கள்...

# டி.என்.ஏ. சோதனை நடத்த முடிவு

புதுடெல்லி, நவ.24–

தலைநகர் டெல்லியில் கடந்த 10ந் தேதி நிகழ்ந்த கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில் 15 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவத்தில் தற்கொலை குண்டாக செயல்பட்ட டாக்டர் உமர் முகமது சம்பவ இடத்திலேயே பலியாகி விட்டார். இவரோடு பயங்கரவாத சதித்திட்டத்தில் ஈடுபட்டதாக 6 பேரை தேசிய புலனாய்வு முகமையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இதற்கிடையே சம்பவத்தின் பின்னணியில் உள்ள சதி பற்றியும் விசாரிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்களில் 4 பேர் டாக்டர்கள். இவர்கள் அரியானா மாநிலம் பரிதாபாத்தில் உள்ள அல்பலா பல்கலைக்கழகத்தோடு தொடர்புடையவர்கள். இவர்களுக்கு ஜெய்ஷ் இ முகமது என்ற பயங்கரவாத அமைப்பு ரூ.20 லட்சம் நிதி உதவி செய்ததாக கூறப்பட்டது. ஆனால் சமீபத்திய விசாரணையில் அந்த பணத்தை பயங்கரவாதிகளே சுயமாக திரட்டிக்கொண்டதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், கார் வெடித்த இடத்தில் சேகரிக்கப்பட்ட சிறு சிறு உடல் பாகங்கள் இதற்கு முன்பு அடையாளம் காணப்பட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. இன்னும் 3 உடல் பாகங்கள் யாருடையது? என அடையாளம் காணப்படவில்லை. ஒரு தாடை, ஒரு கால் மூட்டு, தலையும், கை, காலும் இல்லாத முண்டம் ஆகியவை இன்னும் லோக் நாயக் ஆஸ்பத்திரி பிணவறையிலேயே உள்ளன,.இவற்றை டி.என்.ஏ. பரிசோதனை நடத்தி, யாருடையது? என கண்டறிய அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். அதற்கான வேலைகள் நடந்து வருகிறது.",

# ஸ்டாலின் மீண்டும் ஆட்சி அமைப்பார்: வைகோ நம்பிக்கை

போதைப்பொருள் ஒழிப்பு,சாதிமோதல் தடுப்பு உள்ளிட்டவற்றை வலியுறுத்தி வரும் ஜன.2 முதல் 12ம்தேதி வரை தான் மேற்கொள்ள் இருக்கும் சமத்துவ நடை பயணத்துக்கு எழும்பூரில் உள்ள மதிமுக அலுவலகத்தில் சென்னை மண்டலத்தைச் சேர்ந்த நிர்வாகிகளை மதிமுக பொதுச்செயலாளர் வைகோ நேற்று தேர்வு செய்தார்.அதனை தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது: புகைப்பிடிப்பவர்களுக்கு, மது அருந்துபவர்களுக்கு இந்த நடைபயணத்தில் அனுமதி இல்லை. மருத்துவ வசதிகளும் பயணத்தின் போது மருத்துவர்களும் உடன்வருவது போன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.என் எஞ்சிய நாட்களை மக்களுக்காக வாழ விரும்புகிறேன். கஞ்சா போன்ற போதைப் பொருட்களை ஒழிக்க இந்த நடைபயணம் நடைபெறவுள்ளது.

கஞ்சா போன்ற போதைப்பொருட்கள் வைத்திருந்தால் குறைந்தபட்சம் 10 ஆண்டு சிறை, பயன்படுத்தினால் 7 ஆண்டு சிறை என்று சட்டத்தை புதிதாக கொண்டு வந்து அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். கல்லூரிகளிலே சாதி சங்கங்கள் வைத்துள்ளார்கள், மோதல் ஏற்படுகிறது, வீச்சரிவாள், பட்டா கத்தியோடு சண்டை போடுகிறார்கள். இதை தடுக்கத்தான் 'சமத்துவ நடைப்பயணம்' எனதலைப்பை வைத்துள்ளேன். ஜன.2ம்தேதி திருச்சி மார்க்கெட் அருகே முதல்வர் முக.ஸ்டாலின் நடைபயணத்தை தொடங்கி வைக்கிறார்.

காதர் மொய்தீன், செல்வப்பெருந்தகை, திருமாவளவன் உள்ளிட்டோர் வழி அனுப்ப உள்ளனர். மதுரையில் நடக்கும் நிறைவு நிகழ்வில் கவிஞர் வைரமுத்து, நடிகர் சத்யராஜ், திருமுருகன் காந்தி உள்ளிட்ட முக்கிய நபர்கள், கூட்டணி தலைவர்கள் வாழ்த்துகின்றனர்.

பொதுமக்கள் பெருமளவில் வெள்ளம் போல கூடும்போது அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நிகழ்ச்சியை நடத்தும் தலைவருக்குத்தான்.பொறுப்பு,பாதுகாப்பு உணர்வோடு தலைவர் தான் இருக்க வேண்டும். பாதிப்பு ஏற்பட்டால் குற்ற உணர்ச்சியோடு இருக்க வேண்டும். இழவு வீட்டுக்கு துக்கம் கேட்டுப்போவதுஎன்றால் அவர்களின் வீட்டுக்குத் தான் செல்ல வேண்டும்; ஒன்றரை மாதங்களுக்குப் பிறகு அவர்களை நம் வீட்டுக்கு வரவழைத்து கேட்கக் கூடாது. இவையெல்லாம் பொது வாழ்வில் படித்துக் கொள்ள வேண்டிய பாடங்கள்; அரிச்சுவடி. யாரையும் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக இல்லை. விஜய்தன் கடமையை செய்யத் தவறிவிட்டார். திமுக ஆட்சியில் செயல்படுத்தப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்களை அனைத்து மாநிலங்களும் பின்பற்றி வருகின்றன. மக்களுக்கான எண்ணற்ற நலத்திட்டங்களை திமுக செய்துவருகிறது. நிச்சயம் மக்கள் புரிந்துகொள்வார்கள். வருகின்ற சட்டப்பேரவை தேர்தலிலும் தமிழக முதல்வர் முக.ஸ்டாலின் மீண்டும் ஆட்சி அமைப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## 13ஆம் ஆண்டு நினைவு தினம்.



சேலம் மாவட்ட முன்னாள் செயலாளரும்,முன்னாள் அமைச்சருமான வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்களின் 13வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரின் நினைவிடத்திலும்,திருவுருவபடத்திற்கும் மலர் அஞ்சலி செலுத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன்.இந்நிகழ்வில் வீரபாண்டி ஆ.பிரபு,சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர் சிவலிங்கம்(எம்பி), துணை மாவட்ட செயலாளர் பாரப்பட்டி சுரேஷ் குமார் மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு அவரின் நினைவு தினத்தை அனுசரித்தார்கள்.

# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 26 ஆம் தேதி ஈரோடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம்

## * 605 முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து... 1,84..491 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்...

## * தீரன் சின்னமலை நினைவு இடத்தில் மரியாதை.. பொல்லான் மணிமண்டபம் திறந்து வைப்பு...

ஈரோடு. நவ. 24

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் வருகின்ற நவம்பர் 26 ஆம் தேதி ஈரோடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்தும், பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளையும் வழங்குகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் வருகின்ற 25 மற்றும் 26 ஆம் தேதிகளில் கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்கிறார். அப்போது அவர் பல்வேறு திட்ட பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்கிறார்.

25 ஆம் தேதி காலை கோவையில் செம்மொழி பூங்காவை திறந்து வைக்கிறார். அன்று மாலை கோவையில் நடைபெறும் தொழில் துறை சார்பில் நடைபெறும் பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் நிகழ்ச்சியில் பங்கேற்று புதிய தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்கிறார்.

அதற்கு அடுத்து மறுநாள் காலை 26 ஆம் தேதி, ஈரோடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

அதன்படி அன்று மொடக்குறிச்சி தாலுகாவில் உள்ள ஜெயராமபுரத்தில், சுமார் ஆறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் நினைவு மணிமண்டப அரங்கத்தை திறந்து. வைத்தும் மேலும் அரச்சலூர் ஓடா நிலையில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவிடத்தில், அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

அதனைத் தொடர்ந்து அன்று காலை சுமார் 10:30 மணி அளவில், சோலார் புதிய பேருந்த நிலைய வளாகத்தில் நடைபெறும் விழாவில் முடிவுற்ற 605 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தோம், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், அதே விழா மேடையில் 1..84..491 பயனாளிகளுக்கு அவர் நல திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரை ஆற்றுகிறார்.

அன்று மாலை நடைபெறும் விழாவில் சித்தோடு பகுதியில் பால்வள தந்தை பரமசிவம் அவர்களின் திருஉருவ சிலையை திறந்து வைத்து அவருக்கு மரியாதை செலுத்துகிறார்.

மேலும் இந்த நிகழ்ச்சிகளில் அரச்சலூர் பேரூராட்சி அலுவலக கட்டிடம், மற்றும் நசியனூர் பேரூராட்சி அலுவலக கட்டிடம் உள்ளிட்ட அரசு அலுவலக கட்டிடங்களையும் அவர் திறந்து வைக்கிறார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் ஈரோடு வருவதை முன்னிட்டு ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்ட திமுக சார்பில் அவரை வரவேற்க சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் முதல்வர் ஈரோடு வருகை முன்னிட்டு பல்வேறு அடுக்குகளில் உயர் காவல்துறை அதிகாரிகள் பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பாக செய்து வருகின்றனர். தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் ஈரோடு மாவட்ட சுற்றுப் பயணத்தின் காரணமாக சில இடங்களில் போக்குவரத்து மாற்றமும் செய்யப்பட்டுள்ளது. சாலைகளில் அமைக்கப் பட்டுள்ள வேகத்தடைகள் அகற்றப்பட்டு சாலைகள் செப்பனிட்டு சீர் செய்யும் பணிகளும் வெகு வேகமாக நடைபெற்று வருகிறது.

# அதிமுக ஒன்றிணைந்தால் தான் வெற்றிபெற முடியும் என்பது மக்களின் கருத்து: ஓபிஎஸ்

திண்டுக்கல்:நவ.24–

தேனியில் இருந்து சென்னை செல்ல திண்டுக்கல் ரயில் நிலையத்திற்கு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வந்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "தவெக கூட்டம் உள் அரங்கில் நடந்தியது குறித்து அந்த கட்சி தலைவரிடம் தான் கேட்கவேண்டும். அதிமுக ஒன்றிணைந்தால் தான் வெற்றிபெறமுடியும் என்பது தமிழக மக்களுடைய கருத்தாக உள்ளது" என்றார்.

தவெக கூட்டத்தில் பேசிய விஜய் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் குறித்த கேள்விக்கு, அவரது கனவு நனவாகட்டும் என்றார்.

மேலும், "எஸ்ஐஆர் படிவம் பூர்த்தி செய்து கொடுப்பதில் பிரச்சனை இல்லை. இதில் விடுபட்டாலும் மேலும் ஒருவாய்ப்பாக புதிய வாக்காளர்களை சேர்க்க வாய்ப்புள்ளது. படிவங்கள் பூர்த்தி செய்வதில் சில கடினங்கள் உள்ளன. அதை எளிதாக்கவேண்டும். எஸ்ஐஆர் படிவம் பூர்த்தி செய்து கொடுக்க கால அவகாசத்தை நீட்டிக்கவேண்டும்" என்றார்.

பிஹாரில் எஸ்ஐஆர் தான் வெற்றிக்கு காரணம் என திண்டுக்கல் சீனிவாசன் கூறியது குறித்து கேட்டதற்கு, "சீனிவாசன் அண்ணன் உண்மைதான் பேசுவார், உண்மையை தவிர எதுவும் பேசமாட்டார். பத்திரிகையாளர்கள் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாக்குவது தவிர்க்கப்படவேண்டும். பத்திரிகையாளர்களுக்கு உரிய மரியாதை தரப்படவேண்டும்" என்றார்.

மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணியில் சேர்வது குறித்து கேட்டதற்கு, "அரசியலில் எதுவும் நடக்கலாம். எங்கள் கொள்கையின்படி வாய்ப்பு தரவேண்டும். அண்ணாமலை, தினகரன் சந்திப்புக்கு வாழ்த்துக்கள். அனைவரும் ஒன்றிணைய வாய்ப்பு அதிகம். எனது ஆதரவாளர்கள் விலகுவது என்னை எந்தவிதத்திலும் பாதிக்காது. நாம் பிறக்கும்போது எந்த பதவியோடு பிறந்தோம் இழப்பதற்கு" என்றார்.

# சேலத்தில் திமுக நிர்வாகி கொலை குறித்து அன்புமணி தகவல்

# தமிழ்நாட்டில் கள்ளத்துப்பாக்கிகள் 5000 ரூபாய்க்கு கூட கிடைக்கிறது என பேச்சு.


சேலம், நவ. 24–

சேலத்தில் திமுக நிர்வாகி சுட்டுக்கொலையில் இருந்து திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீரழிவு, துப்பாக்கி கலாச்சாரத்திற்கு இன்னும் ஒரு சான்று என பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் கூறியிருப்பதாவது:

சேலம் மாவட்டம் கருமந்துறையை அடுத்த கிராங்காடு கிராமத்தை சேர்ந்த திமுக கிளைச் செயலாளர் இராஜேந்திரன் அதே பகுதியைச் சேர்ந்த சிலரால் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. அவரைம் இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராஜேந்திரனுக்கும், அதே ஊரைச் சேர்ந்த அவரது உறவினர்களான இராஜமாணிக்கம், பழனிசாமி ஆகியோருக்கும் இடையே நிலத்தகராறு இருந்து வந்ததாகவும், அதன் காரணமாகவே அவர்கள் இராஜேந்திரனை சுட்டுக் கொலை செய்திருக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது. நிலத்தகராறுக்கு கூட ஆளும்கட்சி நிர்வாகியை துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யும் அளவுக்கு தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலை மோசமடைந்திருப்பதை பார்க்கும் போது தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன தான் பாதுகாப்பு? என்ற வினா தான் எழுகிறது.



திமுக ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும், குறிப்பாக சேலம் மாவட்டத்தில் எதிர்க்கட்சிகளை பழிவாங்குவதற்கு மட்டும் தான் காவல்துறை பயன்படுத்தப்படுகிறது. சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதி பா.ம.க. நிர்வாகிகளை ஆளுங்கட்சி தூண்டுதலின் பேரில் காவல்துறையினர் கைது செய்து பொய் வழக்கு பதிவு செய்து வருகின்றனர். பாட்டாளி மக்கள் கட்சியை பழிவாங்கத் துடிப்பதில் காட்டும் அக்கறையையும், செலவிடும் நேரத்தையும் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் காவல்துறை செலவிட்டிருந்தால் இத்தகைய படுகொலைகளை தடுத்திருக்க முடியும். ஆனால், திமுக காவல்துறை அதற்கு தயாராக இல்லை.

திமுக ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து துப்பாக்கிக் கலாச்சாரம் தலைவிரித்தாடுகிறது என்று தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறேன். அந்தக் குற்றச்சாட்டை உறுதி செய்யும் வகையில் தான் சேலம் மாவட்டத்தில் திமுக நிர்வாகி படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். திமுக ஆட்சியில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை,யார் வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் படுகொலை செய்யப்படலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. இதற்காக ஆட்சியாளர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

கடந்த சில வாரங்களுக்கு முன் இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் நகரத்தைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட இளைஞரணி செயலாளரும்,வழக்கறிஞருமான சு.சக்கரவர்த்தியை அதே பகுதியைச் சேர்ந்த சமூக விரோதிகள் சிலர் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்தனர். இராணிப்பேட்டை மாவட்டத்தில் கள்ளத் துப்பாக்கிகள் தடையின்றி கிடைப்பது தான் அதற்கு காரணம் ஆகும்.

தமிழ்நாட்டில் கள்ளத்துப் பாக்கிகள் தாராளமாக கிடைப்பதாகவும், ரூ.5000 விலைக்குக் கூட துப்பாக்கிகள் விற்பனை செய்யப்படுவதாகவும், பல ஆண்டுகளாக பாட்டாளி மக்கள் கட்சி குற்றம்சாட்டி வருகிறது. ஆனாலும், துப்பாக்கி கலாசாரத்தை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்காமல் திமுக அரசு குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருக்கிறது. மக்களைப் பாதுகாக்கத் தவறிய திமுக தொடர்ந்து ஆட்சி செய்யும் உரிமையை இழந்து விட்டது. தங்களைக் காக்கத் தவறிய திமுகவுக்கு வரும் தேர்தலில் சரியான தண்டனையை தமிழ்நாட்டு மக்கள் அளிப்பார்கள்.

# திருப்பூர் வாவி பாளையத்தில் தெருமுனைப் பிரச்சாரம்



திருப்பூர், நவ. 24

திருப்பூர் மாநகர் மாவட்ட அம்மா பேரவையின் சார்பாக, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் அட்லஸ் லோகநாதன் தலைமையில், திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி, நெருப் பெரிச்சல் பகுதி கழகம், 5வது வார்டு, வாவிபாளையம் ரவுண்டானா பகுதியில் 10 ஆண்டுகால அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்ட சாதனைதிட்டங்களையும், ஆளும் தமிழக அரசு பதவி ஏற்ற இந்த 4.5 ஆண்டுகளில் பொது மக்கள், விவசாயிகள் வியாபாரிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை துண்டு பிரசுரங்களாக அச்சிட்டு திருப்பூர் மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர்

பொள்ளாச்சி. ஜெயராமன் எம்எல்ஏ வீடு வீடாக சென்று பொதுமக்களுக்கு வழங்கி திண்ணை பிரச்சாரத்தில் ஈடுபட்டார் திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர். கே.என். விஜயகுமார் முன்னிலை வகித்தார் .

நெருப்பெரிச்சல் பகுதி கழக செயலாளர் நாச்சிமுத்து வரவேற்புரை யாற்றினார்.

5வது வார்டு கழக செயலாளர் கோவிந்தராஜ்,மாமன்ற உறுப்பினர் திருமதி. இந்திராணி ஆனந்தன் ஆகியோர் நன்றி உரையாற்றினார்.

இந்நிகழ்வில், மாமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அன்பகம் திருப்பதி, மாமன்ற எதிர்க்கட்சி கொறடாவுமான கண்ணப்பன், மாநில எம்.ஜி.ஆர் மன்ற துணை செயலாளர் பட்டுகவுண்டர் மாவட்ட கழக இணைச் செயலாளர் திருமதி. சங்கீதா சந்திரசேகர், மாவட்ட கழக துணைச் செயலாளர் .பூலுவபட்டி பாலு. பகுதி கழக செயலாளர்கள் ஹரிஹரசுதன்,

சிவளா தினேஷ், மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞரணி செயலாளர் . வேல்குமார் சாமிநாதன்,மாவட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி.சுந்தராம்பாள், மாவட்ட விவசாய அணி செயலாளர் கலைமகள் கோபால்சாமி, மாவட்ட வர்த்தக அணி செயலாளர் பழனிச்சாமி,மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் தம்பி மைதீன், மாவட்ட கலைப் பிரிவு செயலாளர் .ரத்தின குமார், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் சாமி கணேஷ், மாவட்ட மீனவர் அணி செயலாளர் யுவராஜ் சரவணன், வார்டு கழக செயலாளர் இமானுவேல், செல்வராஜ். மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர்கள் ஆண்டவர் பழனிச்சாமி, பெட்ரோல் பங்க் சந்திரசேகர், பழனிவேல், சொர்க்கம் நீதிராஜன் .தாமரை கண்ணன்,மர்பி ராஜா, அசோக், பகுதி அம்மா பேரவை செயலாளர் பழனிச்சாமி, தலைமைக் கழக பேச்சாளர்கள் எரியீட்டி சேகர், பாரதிப்பிரியன், பலகுரல் வெள்ளியங்கிரி, மற்றும் மாவட்ட, பகுதி, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பூத் கிளை நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

# திருச்சி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்;

திருச்சி, நவ. 24–

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 01.01.2026 ஐத் தகுதி ஏற்பு நாளாகக் கொண்டு தகுதியுள்ள நபர்கள் எவரும் வாக்காளர் பட்டியலில் விடுபடவில்லை என்பதையும், தகுதியற்ற நபர்கள் யாரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதையும் உறுதி செய்யும் பொருட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்குட்பட்ட 09 சட்டமன்ற தொகுதிகளிலும் 04.11.2025 அன்று முதல் சிறப்பு தீவிரத்திருத்த பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட சிறப்பு தீவிரத்திருத்த பணியில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்குட்பட்ட 09 சட்டமன்ற தொகுதிகளிலும் 22.11.2025 மற்றும் 23.11.2025 ஆகிய நாட்களில் 2543 வாக்குசாவடி மையங்களிலும் அமைக்கப்பட்ட உதவி மையங்களின் வாயிலாக 2,11,605 எண்ணிக்கையிலான கணக்கீட்டு படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வாக்காளர்களிடமிருந்து மீள பெறப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்குட்பட்ட 09 சட்டமன்ற தொகுதிகளிலும் 23,68,968 எண்ணிக்கையிலான மொத்த வாக்காளர்களில், நாளது தேதி வரை 22,30,850 எண்ணிக்கையிலான வாக்காளர்களுக்கு முன்நிரப்பப்பட்ட படிவங்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 11,64,968 எண்ணிக்கையிலான வாக்காளர்களிடமிருந்து மீள பெறப்பட்ட பு+ர்த்தி செய்யப்பட்ட முன்நிரப்பப்பட்ட படிவங்களை வாக்குசாவடி நிலை அலுவலர்கள் செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

(23.11.2025)138 மணப்பாறை,141திருச்சிராப்பள்ளி (கிழக்கு) மற்றும் 146 துறையூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் சிறப்பு வாக்குச்சாவடி முகாம்களின் மூலம் வாக்காளர்களுக்கு கணக்கீடு படிவங்கள் வழங்கிடும் பணியினையும், உதவி மையங்களின் செயல்பாடுகளையும், பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை டீடுமு செயலியில் பதிவேற்றம் செய்யும் பணியினையும் திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்; வே.சரவணன்;,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று சம்பா நெற்பயிருக்கு காப்பீடு செய்ய கால அவகாசம் நவம்பர் 30 வரை நீட்டிப்பு

### திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் நவ 24 :

தமிழக விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று நடப்பு சம்பா நெற்பயிருக்கு காப்பீடு செய்வதற்கான கால அவகாசத்தை நவம்பர் 30 வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை பருவத்தில் இயல்பான மழை அளவு சுமார் 604 மி.மீ கிடைக்கப்பெறும். தற்பொழுது வரை அக்டோபர் மற்றும் நவம்பர் மாதத்தில் 425 மி.மீ மழைப்பொழிவு பெறப்பட்டு, 244 எக்டர் நெற்பயிர்கள் சேதமுற்றது. மேலும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் அதிக மழைபொழிவு பெற வாய்ப்புள்ளது.

எனவே தொடர் மழை வெள்ளம், பூச்சி நோய் தாக்குதல் போன்ற இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்பினை ஈடுசெய்ய விவசாயிகள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு சம்பா பருவத்தில் நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.545 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ / தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, இசேவை மையங்களிலோ நேரிடையாக, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் காப்பீடு கட்டணம் செலுத்தி காப்பீடு செய்துகொள்ளலாம்.

இத்திட்டத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர் கடன் பெற்ற விவசாயிகளுக்கு சம்மந்தப்பட்ட வங்கிகளின் மூலம் பயிர் கடன் தொகையில் இருந்து காப்பீட்டு கட்டணம் பிடித்தம் செய்யப்படுகிறது. பயிர் காப்பீடு செய்ய விருப்பமின்மை படிவம் கொடுத்த பயிர் கடன் பெற்ற விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கு பெற இயலாது. எனினும் விருப்பமின்மை படிவம் ஏற்கனவே கொடுத்திருந்து, தற்பொழுது பயிர் காப்பீட்டில் பங்குபெற விரும்பினால் அவர்கள் சம்பந்தப்பட்ட வங்கி / தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நெற்பயிருக்கு காப்பீடு செய்து பயன்பெறுமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

## டிச.10ல் அதிமுக செயற்குழு, பொதுக்குழு கூட்டம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை: நவ. 24–

அதிமுகவின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் வரும் டிச. 10ம் தேதி சென்னை வானகரத்தில் நடைபெறும் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "அதிமுக செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம், கட்சியின் சட்ட விதிகளின்படி வரும் டிச. 10ம் தேதி காலை 10 மணிக்கு சென்னை வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாசலபதி பேலஸ் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கட்சியின் அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். கட்சியின் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவருக்கும் தனித் தனியே அழைப்பிதழ் அனுப்பிவைக்கப்படும்.

உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு அனுப்பப்படும் அழைப்பிதழுடன் தவறாமல் வருகை தந்து கழக செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

# ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி மாரியம்மன் தேர் திருவிழாவை முன்னிட்டு மாரத்தான் போட்டி



ஈரோடு, நவ.24–

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஒன்றியம் ஸ்ரீ மாரியம்மன் தேர் திருவிழாவை முன்னிட்டு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் மாரத்தான் போட்டி நடைபெற்றது.

12 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவியர்கள் 2 கிலோமீட்டர், 18 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவியர்கள் 4 கிலோமீட்டர், 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு 6 கிலோமீட்டர் என மூன்று பிரிவுகளாக போட்டிகள் நடை பெற்றது.

அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி இருந்து ஆரம்பித்து மஞ்சக் காட்டு வலசு, காட்டுப்பாளையம் வரை சென்று திரும்பி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்திற்கு வர வேண்டும்.மாரத்தான் போட்டியில் வெற்றி பெற்று முதல் மூன்று இடம் பிடித்தவர்களுக்கு கோப்பைகள் வழங்கப்படும் மற்றும் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ், நினைவுபரிசு மற்றும் மரக்கன்று வழங்கப் பட்டது.

போட்டியை தொடங்கி வைத்து தலைமை ஏற்று நடத்தி பரிசுகளை வழங்கியவர் சரவணன் பேரூர் கழக செயலாளர் திமுக மொடக்குறிச்சி மாரத்தான் போட்டிகள் பூங்குறிச்சி நண்பர்கள் மொடக்குறிச்சி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# சத்தியமங்கலம் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை சாா்பில், 200 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர நலத்திட்ட உதவிகள் வழங்கல்



செஞ்சி.நவ.24

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த சத்தியமங்கலம் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை சார்பில், மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி சத்தியமங்கலம் வள்ளலார் தர்மசாலையில் நடைபெற்றது.

இதில் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை நிறுவனர் ஞானமாணிக்கம் தலைமை தாங்கினார் விழுப்புரம் வடக்கு மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்ய சங்கம் செயலாளர் முத்து கார்த்திகேயன் முன்னிலை வகித்தார் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை பணியாளர் வெண்ணிலா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சத்தியமங்கலம் காவல் ஆய்வாளர் சுரேஷ்பாபு கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகள் 200 நபர்களுக்கு உணவு அரிசி, காய்கறிகள் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை மூலம் மாதந்தோறும் ஏராளமான மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாக ஆய்வாளர் சுரேஷ்பாபு கூறினார்.

மேலும் மாற்றுத்திறனாளி ஒருவர் பாடல் பாடி அனைவரையும் மகிழ்வித்தார் இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சத்தியமங்கலம் சிபிஐ மாவட்ட செயலாளர் ஆல்பர்ட் வேளாங்கண்ணி, நவீன் எல்பிஜி கேஸ் சர்வீஸ் பிரான்சிஸ், , ஜான்டி குரூஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் சத்தியமங்கலம் ராஜா நன்றி உரை வழங்கினார்.

# பட்டுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்




தஞ்சாவூர் நவ 23.

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு வருவாய்த்துறை கிராம உதவியாளர் சங்கம் சார்பாக, கள்ளக்குறிச்சி மாவட்டம். திருக்கோவிலூர் வட்டம் கனகந்தலை பகுதியில் வசித்து வந்தவர். திருமதி ஜாகிரா பேகம்.

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் பணி பார்த்த கிராம உதவியாளர் தோழி. திருமதி. ஜாகிராபேகம் உயர் அலுவலர்களின் அழுத்தத்தினால், மன அழுத்தம் ஏற்பட்டு கடந்த மூன்று நாட்களுக்கு முன்னால். தற்கொலை செய்து கொண்டதாக தெரிகிறது. பணிச்சுமை நெருக்கடி காரணமாக இவ்வாறு நடந்துள்ளது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கண்டித்தம், இனிமேலாவது அதிகார வர்க்கம் கொண்டவர்கள், ஊழியர்களின் நிலைமையை உணர்ந்து, பணி செய்யும் அனைவருக்கும் தகுந்த கால அவகாசம் கொடுத்து, பணி செய்யவிட வேண்டும் என கண்டன ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை வைத்தனர்.

பட்டுக்கோட்டையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு வருவாய்த்துறை கிராம உதவியாளர் சங்க வட்ட தலைவர் கஜேந்திரன் தலைமை தாங்கினார்.வட்டச் செயலாளர் ம.செபஸ்டின் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு வருவாய்த்துறை ஓய்வு பெற்ற மாநில பொதுச் செயலாளர் தோழர் .பிச்சைமுத்து முன்னிலை வகித்தார்.

தமிழ்நாடு வருவாய் துறை கிராம உதவியாளர் சங்க மாநில பொருளாளர்.

வெங்கடாஜலபதி மற்றும் மாநிலத் துணைத் தலைவர் .நல்லதம்பி, மாநில செயற்குழு உறுப்பினர் பக்கிரிசாமி கோரிக்கை மற்றும் விளக்கவுரை ஆற்றினார்.

மற்றும் வட்ட பொறுப்பாளர்கள். பக்கிரிசாமி, பாப்பாத்தி, கண்ணன், ஜவஹர் பாபு, பாலசுப்பிரமணியன் மற்றும் ஏனைய முன்னணி ஊழியர்கள்,

தோழர்கள், தோழியர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக வட்டப் பொருளாளர் செந்தில்குமார் நன்றிய உரையாற்றினார்.

## சென்னை: ரெயிலில் அனாதையாக கிடந்த 9 மாத குழந்தை மீட்பு ",

சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்துக்கு கேரள மாநிலம் ஆலப்புழாவில் இருந்து நேற்று காலை ஆலப்புழா எக்ஸ்பிரஸ் ரெயில் வந்தது. இந்த ரெயிலின் எஸ்.7 பெட்டியில் பெண் குழந்தை ஒன்று அழுதுகொண்டிருந்தது. குழந்தையின் அருகில் பெற்றோர் மற்றும் உறவினர்கள் யாரும் இல்லை. இதையடுத்து, குழந்தையை மீட்ட ரெயில்வே பாதுகாப்பு படையினர், அரசு குழந்தைகள் நல குழுமத்திடம் ஒப்படைத்தனர். இந்த சம்பவம் குறித்து ரெயில்வே பாதுகாப்பு படையினர் வழக்குப்பதிவு செய்து குழந்தையை ரெயிலில் விட்டு சென்றது பெற்றோரா? அல்லது வேறு யாரேனுமா? என்றும், குழந்தையுடன் ரெயிலில் ஏறிவிட்டு, குழந்தை கையில் இல்லாமல் இறங்கும் பயணி யார்? என்றும் ரெயில் நிலையங்களில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்து ரெயில்வே பாதுகாப்பு படையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ",

# தேசிய குழந்தைகள் தினத்தை முன்னிட்டு செஞ்சி செக்கோவர் நிறுவனம் சார்பில் இலவச பொது மருத்துவம் மற்றும் கண் சிகிச்சை முகாம்



செஞ்சி நவ 24

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி புனிதமிக்கேல் ஆலய வளாகத்தில் தேசிய குழந்தைகள் தினத்தை முன்னிட்டு செஞ்சி செக்கோவர் நிறுவனம் எஸ் டி சி ஆர் மற்றும் வாஷ் திட்டத்தின் தன்னார்வளர்கள் முன்னெடுக்கும் இலவச பொது மருத்துவம் மற்றும் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி வட்டார முதன்மை குழு அருட்தந்தை அந்தோணி ரோச் தலைமை தாங்கி துவக்கி வைத்தார் .

செக்கோவர் இயக்குனர் அம்பிகா சூசைராஜ் முன்னிலை வகித்தார். இதில் பாண்டிச்சேரி பிம்ஸ் மருத்துவ குழுவினர் பொதுமக்களுக்கு கண் பரிசோதனை மற்றும் உடல் பரிசோதனை செய்து ஆலோசனை மற்றும் சிகிச்சை அளித்தனர் .

முகாமில் முடையூர் தையூர் கவரை, காரை அணையேறி தடாகம் நல்லான் பிள்ளை பெற்றாள் ஆலம் பூண்டி மேல் பாப்பம்பாடி செவலபுரை எம்ஜிஆர் நகர் ஜே ஜே நகர் வழுக்காம் பாறை கொத்த மங்கலம் கன்னிகாபுரம் ஊரணிதாங்கள் போன்ற சுற்று வட்டார பகுதியில் உள்ள கிராமங்களில் இருந்து சுமார் 500க்கும் மேற்பட்ட குழந்தைகள் பெரியோர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இம் முகாமில் கிராம குழந்தைகள் பாதுகாப்பு குழுவினர் மற்றும் செக்கோவர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கோயம்புத்தூர் மற்றும் தென் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் கலைஞர்கள் பல்வேறு கலை வடிவங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தினர்..



கோவை, நவ24

கோவை விழா ஓவிய சந்தை (ART Street ); கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார் T. கிரியப்பனவர் தொடங்கி வைத்தார்.

கோயம்புத்தூர் விழா 18 வது பதிப்பு நவம்பர் 14 ஆம் தேதி முதல் அனைவருக்குமான நிகழ்வுகளுடன் நகரின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்படுகிறது. 2018 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர் விழாவின் 10 வது பதிப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்ற முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக கருதப்படும் ஓவிய சந்தை (Art street ) , இந்த ஆண்டும் நடத்தப்பட்டது. ரிப்ளெக்ஷன்ஸ் (Reflections) கருப்பொருளை மையமாக கொண்டு இந்த ஆண்டு நடத்தப்படுகிறது.

கோயம்புத்தூர் மற்றும் தென் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் கலைஞர்கள் பல்வேறு கலை வடிவங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தும் களமாக அமைகின்றது. இதனை கோவை மாவட்ட ஆட்சியர்

பவன் குமார் T. கிரியப்பனவர் தொடங்கி வைத்தார். இந்த ஆண்டு நிகழ்ச்சியானது , ரேஸ் கோர்ஸ் பகுதியில் உள்ள அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டது. இந்த ஆண்டின் கோயம்புத்தூர் விழா ஆர்ட் ஸ்ட்ரீட் ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை கவர்ந்தது.

நகரின் மிகவும் விரும்பப்படும் கலாச்சார நிகழ்வுகளில் ஒன்றாக பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு 90 கலைஞர்கள் பங்கேற்று, தங்களது தனித்துவமான கலைத்திறன்களை வெளிப்படுத்தினர். இது கோவையின் வளர்ந்து வரும் கலைத்துறைக்கு ஒரு வண்ணமயமான கொண்டாட்டமாக அமைந்தது. இந்த ஆண்டின் முக்கிய புதுமையாக பெவிலியன்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. . பார்வையாளர் களிடையே இவை பெரும் வரவேற்பைப் பெற்றன; இது முழு ஆர்ட் ஸ்ட்ரீட் அனுபவத்துக்கு ஒரு புதிய ஆழத்தையும் அழகையும் சேர்த்தது.

இந்த ஆண்டு கருப்பொருள் "ரிப்ளெக்ஷன்ஸ் (Reflections)", ஒளி மற்றும் வடிவங்களின் உடல் பிரதிபலிப்புகள் முதல் மனது, உணர்ச்சி, நினைவுகள் ஆகியவற்றின் ஆழமான பிரதிபலிப்பதாக இருந்தது. கோவையின் கடந்த காலத்தையும் அதன் மாற்றம் அடையும் நிகழ்காலத்தையும் இணைக்கும் வகையில் இந்த கருத்து பார்வையாளர்களை ஆழ்ந்து சிந்திக்கவும், யோசிக்கவும், கோயம்புத்தூரை புதிய கோணங்களில் மீண்டும் கண்டறியவும் செய்தது.

# மாநில அளவிலான சிலம்பாட்ட போட்டி



திருச்சி முத்தமிழ் சிலம்பம் டிரஸ்ட் சார்பாக உறையூரில் மாநில அளவிலான சிலம்பாட்ட போட்டி காலை தொடங்கி மாலை வரை நடைபெற்றது இப் போட்டியில் 16 மாவட்டங்களில் இருந்து 900 திற்கும் மேலான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர் மதியம் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களை குற்றவியல் வழக்கறிஞர் சங்க செயலாளர் றி. கஷி. வெங்கட் இணை செயலாளர் நி. விஜய் நாகராஜன் ஆகியோர் பரிசுகளை வழங்கினர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிலம்பாட்ட கழகத்தை சேர்ந்த சரவணன் மற்றும் நாகவேல் ஆகியோர் செய்திருந்தனர்.

# விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் - ஜெயங்கொண்டான் கிராமத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்





விழுப்புரம், நவ. 24–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம், ஜெயங்கொண்டான் கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ பாலவிநாயகர், ஸ்ரீ பாலமுருகர், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் நூதன ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் வரும் 2025 நவம்பர் 23ஆம் தேதி (கார்த்திகை மாதம் 7ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி முதல் 10.00 மணி அளவில் நடைபெற்றது

இந்த கும்பாபிஷேகம் விசுவாவசு வருடம், திருதியை திதி, மூல நட்சத்திரம், அமிர்த யோகம் எனும் சுபநேரத்தில் நடைபெற்றது சிற்பசாஸ்திர முறைப்படி புதிதாக கட்டப்பட்ட ஆலயம், வாண காலாடங்கள், சிவகாம பாறை படி உள்ளிட்ட அனைத்து பணிகளும் நிறைவு பெற்று கும்பாபிஷேக நிகழ்ச்சி நடைபெறு கும்பாபிஷேக நீர் அபிஷேகம் செய்து தீபாராதனை நிறைவு பெற்றது.

ஸ்ரீ முத்துமாரியம்மன் பெருமை, அம்மனின் அருள்வாக்கு மற்றும் பக்தர்களுக்கு அளித்து வரும் நலன்கள் குறித்து கிராம மக்கள் பெருமிதம் தெரிவித்துள்ளனர். ஜெயங்கொண்டான் கிராமத்தில் வழிபாட்டின் மையமாக விளங்கும் ஸ்ரீ முத்து மாரியம்மன், வேண்டுவோரின் நோய்நாடிகளை நீக்கி, செல்வ செழிப்பும் வளமும் அருளும் அன்னையாக பக்தர்கள் வணங்கி வருகின்றனர்.

கும்பாபிஷேக விழாவில் ஆன்மீக பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்களால் இயன்ற பொருளுதவி மற்றும் பணஉதவிகளை அளித்து, மஹா கும்பாபிஷேக நிகழ்வை சிறப்பிக்கும்படி ஆலய நிர்வாகத்தினர் அன்புடன் கேட்டுக் கொண்டுள்ளனர்.

திருவிழா பிந்தைய நாட்களில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளதாகவும் உபயதாரர்களும் பொதுமக்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாமக்கல் மாவட்டத்தில் 14 பெண் ஆட்டோ / டாக்ஸி வாகன ஓட்டுநர்களுக்கு ரூ.14.00 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது

## தமிழ்நாடு முதலமைச்சருக்கு பெண் ஆட்டோ ஓட்டுநர்கள் நிறைந்த மனதுடன் நன்றி

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, நாமக்கல் மாவட்டத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியம் உட்பட 20 வாரியங்களில் சுமார் 93,688 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். மேலும் கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி உதவித் தொகை, ஓய்வூதியம், இயற்கை மரணம், விபத்து மரணம், கட்டுமான பணியிடத்து விபத்து மரணம், குடும்ப ஓய்வூதியம், விபத்து ஊனம், பெண் ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ / டாக்சி மானியம், கட்டுமான தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி என 1,98,113 பயனாளிகளுக்கு ரூ.215.55 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலம் வீட்டு வசதித்திட்டத்தில் பயனாளிகளுக்கு அடுக்குமாடி குடியிருப்பில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மேலும், தொழிலாளர்களுக்கு அவர்களாகவே வீடு கட்டிக்கொள்ள தலா ரூ.4.00 இலட்சம் மற்றும் தொழிலாளர்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில ரூ.50,000/ வழங்கப்பட்டு வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தில், தொழிலாளர் நலத்துறையின் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு சொந்தமாக புதிய ஆட்டோ ரிக்சா / டாக்ஸி வாகனம் வாங்க தலா ரூ.1.00 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நாமக்கல் மாவட்டத்தில் 13 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா வாங்குவதற்கும், ஒரு பெண் ஓட்டுநருக்கு டாக்ஸி வாங்குவதற்கும் என 14 பெண் வாகன ஓட்டுநர்களுக்கு தலா ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.14.00 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியம் மூலம் சொந்தமாக புதிய ஆட்டோ வாகனம் வாங்க ரூ.1.00 இலட்சம் மானியம் பெற்ற நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தைச் சேர்ந்த திருமதி பிரேமா, க/பெ.விஜயன் அவர்கள்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தைச் சேர்ந்த திருமதி பிரேமா, க/பெ.விஜயன் அவர்கள் தெரிவித்ததாவது,

எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். எனது கணவர் கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். பல்வேறு இடங்களில் தற்காலிகமாக வேலை செய்து எனது குழந்தைகளை வளர்த்து வருகிறேன். எனது குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, சொந்தமாக தொழில் தொடங்க வேண்டும் என இணைய தளத்தில் தேடிய பொழுது நலவாரியத்தில் பதிவு பெற்ற பெண் ஓட்டுநர்களுக்கு மானியம் வழங்கப்படுவதை தெரிந்து கொண்டேன். எனது தந்தை வாகன ஓட்டுநராக உள்ளார். நானும் ஆட்டோ வாகனம் ஓட்டி வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளேன். தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ளேன். தற்பொழுது எனக்கு ஆட்டோ வாங்குவதற்கு மானியமாக ரூ.1.00 வழங்கியுள்ளார்கள். நாளொன்றுக்கு சுமார் ரூ.700/ வரை வருமானம் ஈட்டி வருகிறேன். நமக்கென சொந்த தொழில் இருந்தால் மட்டுமே வாழ்க்கையில் முன்னேற முடியும். இன்றைய காலத்தில் அனைத்து பெண்களும் சுயதொழில் செய்து முன்னேற வேண்டும். சமுதாயத்தில் ஏழை, எளிய பெண்கள் தனித்து வாழவும், வாழ்க்கையில் முன்றேவும் இத்தகைய திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நிறைந்த மனதுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.

## ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களின் 100 வது பிறந்த நாள் விழா 5000 பயாணிகளுக்கு உணவு மற்றும் கம்பளி அன்பளிப்பு.





ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் நூறாவது பிறந்த நாள் விழாவை சிறப்பிக்கும் வகையில் கொடைக்கானல் லேக் ரோட்டில் அமைந்துள்ள சத்திய சாய் சுருதி வளாகத்தில் காலை 8.00 மணிமுதல் அன்னதானம், மற்றும் பகவானின் திருவுருவ காலண்டர் மற்றும் கம்பளி வழங்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் சுமார் 5000 பயனாளிகள் கலந்துக்கொண்டு பகவானின் அருளாசி பெற்றனர். பிறந்தநாள் விழாவின் தொடக்கமாக நேற்று முன்தினம் கொடைக்கானல் வாழும் சுமார் 30 குதிரைகளுக்கு கொள்ளு அளிக்கப்பட்டது. மேலும் நேற்று காலையும் மாலையும் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவின் ஏற்பாடுகளை தமிழ்நாடு ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவாகத்தினர் செய்திருந்தனர்.

# மயிலாடுதுறை: பேராசிரியர் தம்பதி" வீட்டில் 22 பவுன் நகைகள் கொள்ளை ,

"மயிலாடுதுறை, நவ.24–

மயிலாடுதுறை டவுன் ஸ்டேஷன் ரோடு சாரதா நகரை சேர்ந்தவர் மணிகண்டன் (வயது 49). இவருடைய மனைவி விஜயா. கணவன்மனைவி இருவரும் கல்லூரி பேராசிரியர்கள் ஆவர். சம்பவத்தன்று கணவன்மனைவி இருவரும் வீட்டை பூட்டி விட்டு திருச்சிக்கு சென்றனர். இந்த நிலையில் மணிகண்டனின் வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்த அவரது தந்தை போலீசுக்கு தகவல் தெரிவித்தார். இதையடுத்து திருச்சியில் இருந்து மணிகண்டன் மயிலாடுதுறையில் உள்ள தனது வீட்டுக்கு வந்து பார்த்தார். அப்போது வீட்டில் 150 கிலோ எடை கொண்ட இரும்பு லாக்கரை கொள்ளையர்கள் தூக்கி சென்றதும் அந்த லாக்கரில் ரூ.20 லட்சம் மதிப்பிலான 22 பவுன் நகைகள் மற்றும் 1 கிலோ வெள்ளி பொருட்கள் இருந்ததும் தெரிய வந்தது. மேலும், வீட்டுவாசலில் நிறுத்தியிருந்த ஸ்கூட்டரையும் விட்டு வைக்காத மர்ம ஆசாமிகள் அதையும் திருடிச்சென்று உள்ளனர். இது தொடர்பாக மயிலாடுதுறை போலீசார் விசாரணை நடத்தி மர்ம நபர்களை தேடி வருகிறார்கள். ",

## முரசொலிமாறன் 22வது நினைவு தினம்

# எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., மற்றும் திமுகவினர் மலரஞ்சலி



புதுச்சேரி, நவ.24–

புதுச்சேரி மாநில திமுக சார்பில், மறைந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான முரசொலிமாறன் அவர்களின் 22வது நினைவு தினம் நேற்று காலை அனுசரிக்கப் பட்டது.

மாநில கழக அமைப் பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமையில் மண்ணாடிப் பட்டு தொகுதிக்கு உட்பட்ட திருக்கனூர் கடைவீதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., கலந்து கொண்டு அலங்கரிக்கப் பட்ட முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப் பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன், துணை அமைப்பாளர்கள் ஏ.கே.குமார், அ. தைரிய நாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அருட்செல்வி, பொதுக் குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், எஸ். எஸ். செந்தில் குமார், டி. செந்தில்வேலன், அமுதாகுமார், தொகுதி செயலாளர்கள் ம. கலைவாணன், இரா. சக்திவேல், செ. நடராஜன், பி. சா. இளஞ் செழியப்பாண்டியன், தட்டாஞ்சாவடி தொகுதி பொறுப்பாளர், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் நித்தீஷ், இந்திரா நகர் தொகுதி பொறுப்பாளர் பசுபிக் சங்கர், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி, தொகுதி அவைத் தலைவர் மண்ணாங்கட்டி, துணைச் செயலாளர் அழகப்பன், மாநில தொண்டரணி துணை அமைப்பாளர்கள் பாரதி, அரசம்மாள், அருணகிரி, பழநிசாமி, முன்னாள் இளைஞர் அணி சந்தோஷ்குமார், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆ. அகிலன், ம. ரெமிஎட்வின், தாமரைக்கண்ணன் மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், கழகமூத்த முன்னோடிகள் என பலரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.



நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி நாமக்கல் மாநகராட்சி கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 சிறப்பு முகாமில் பெறப்பட்ட மனுக்கள் பதிவேற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# ஆண்டுதோறும் ரூ.30 கோடி வழங்கப்படுகிறது. பட்டியலின மக்களுக்கு நடக்கும் துரோகம்

## பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் வெங்கடேஷ் மௌரியா காட்டம்



சேலம், நவ. 24–

பட்டியலின மக்களுக்கு திமுக அரசு துரோகம் செய்து வருகிறது என்று பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் வெங்கடேஷ் மௌரியா கூறினார்.

சேலம் மரவனேரி பகுதியில் உள்ள மாதவம் அரங்கில் பாஜக பட்டியல் அணி சார்பில் சேலம் பெருங்கோட்ட பொறுப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.மாநிலத் தலைவர் சம்பத்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக பாஜக தேசிய செயற்குழு உறுப்பினரும் மாநில பார்வையாளருமான வெங்கடேஷ் மௌரியா கலந்துகொண்டு பொறுப்பாளர்களுக்கு பல்வேறு ஆலோசனை களை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: பிரதமர் மோடி தலைமையிலான மத்திய பாஜக அரசு பட்டியலின மக்களுக்காக பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மத்திய அரசு தமிழகத்தில் உள்ள பட்டியலின மக்களின் நலனுக்காக ஆண்டுதோறும் ரூ. 30 கோடி நிதி ஒதுக்கி வருகிறது. அந்த நிதியை பட்டியலின மக்களுக்கு திமுக அரசு செலவு செய்வதில்லை. மாறாக, மகளிர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு மடைமாற்றி வருகிறது. இதன்மூலம் பட்டியலின மக்களுக்கு திமுக துரோகம் செய்து வருகிறது. அம்பேத்கர் புகழ்பாடும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, அம்பேத்கரை அவமதித்த காங்கிரஸுடன் அரசியல் ஆதாயத்துக்காக கூட்டணி வைத்துள்ளது. அம்பேத்கர் குறித்து பேச திருமாவளவனுக்கு எந்த தகுதியும் இல்லை. அம்பேத்கரை அவர் உண்மையாக நேசிப்பதாக இருந்தால் திமுக தலைமையிலான கூட்டணியில் இருந்து வெளியேற வேண்டும்.

வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி பட்டியலின மக்கள் ஆதரவுடன் வெற்றி பெறும். அதற்காக நாங்கள் சிறப்பாக களப்பணி ஆற்றுவோம் என்றார்.

அப்போது மாநில பொதுச்செயலாளர் சாட்சாதிபதி, மாவட்ட பட்டியலின தலைவர் மோகன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# திருவள்ளூரில் மாவட்ட தொடக்க நிலை இடையீட்டு மையத்தில் மேம்படுத்தப்பட்ட ஐம்புலன்கள் ஒருங்கிணைப்பு பூங்கா

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் திறந்து வைத்து, குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கினார்



திருவள்ளூர் நவ 24 : திருவள்ளூர் ஜே.என். சாலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மாவட்ட தொடக்க நிலை இடையீட்டு மையத்தில் மேம்படுத்தப்பட்ட ஐம்புலன்கள் ஒருங் கிணைப்பு பூங்காவை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் திறந்து வைத்து, குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கி பேசினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து குழந்தைகளை போலவும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளும் சமூகத்தில் எந்த வேறுபாடுகளும் இன்றி செயல்பட பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறார்கள். திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்திய காரியாக்கரம் திட்டத்தின் கீழ் மாவட்ட தொடக்க நிலை இடையீட்டு மையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.மையத்தின் முக்கிய சேவைகள், பிறந்த பச்சிளம் குழந்தைகளில் பிறவி குறைபாடுகள் இருப்பதா என்று பரிசோதனை செய்து, தேவையான சிகிச்சை வழங்குதல், சிறு குழந்தைகளின் உடல் வளர்ச்சி மற்றும் மன வளர்ச்சி குறைபாடுகளை கண்டறிந்து சிகிச்சை அளித்தல், ஊட்டச்சத்து மற்றும் விட்டமின் குறைபாடுகளை கண்டறிந்து மேலாண்மை செய்தல்.

2018 முதல் இதுவரை வழங்கப்பட்ட சிகிச்சைகள், இருதய அறுவை சிகிச்சை பெற்ற குழந்தைகள் – 473, செவிக்குறைபாடு உடைய குழந்தைகளுக்கு Cochlear Implant Surgery – 28, கண் பார்வை குறைபாடு ஏற்படுத்தும் ஸிளிறி லேசர் சிகிச்சை ரூ 51, பிறவி கண்புரை நீக்கும் அறுவை சிகிச்சை 28, உதடு, அன்னப்பிளவு சீரமைப்பு – 125, உயரக்குறைவு உள்ள குழந்தைகளுக்கு வளர்ச்சி ஹார்மோன் ஊசி – 46, பிறவி குறைபாடுள்ள குழந்தைகளுக்கான உதவி உபகரணங்கள் 66, கடந்த ஓராண்டில் மட்டும் 17,693 பயனடைந்த குழந்தை களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது.


வளர்ச்சி குறை பாடுள்ள குழந்தைகளுக்கு பயனளிக்கும் வகையில், மையத்தில் ஏற்கனவே இருந்த புலன்கள் ஒருங்கிணைப்பு பூங்கா, பயனாளிகள் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தப் பட்டது.

பூங்காவின் சிறப்பம்சங்கள், பல நிறங்களில்வடிவமைக்கப்பட்ட விளையாட்டு பகுதிகள் பார்வை உணர்வு மற்றும் புலன்கள் தூண்டுதலுக்கு உதவும், தொடு உணர்வை தூண்டும் தரை – பாதை அமைப்புகள் நரம்பு செயல்பாட்டை மேம்படுத்தும், பல்வேறு விளையாட்டு உபகரணங்கள் தசை வலு மற்றும் நரம்பு ஒருங்கிணைப்பு மேம்பாடு, புலன்கள் ஒருங்கிணைப்பு பயிற்சி குழந்தைகள் தங்களின் சொந்த உணர்வுகளை பயன்படுத்தி செயல்பட உதவும், பசுமை சூழல் மனவளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் உதவும். கூடுதலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.15 இலட்சம் நிதி உதவிகளை வழங்கியுள்ளார்கள். அதனை பெற்று பிற பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் படும் என மாவட்ட ஆட்சியர் கூறினார்.

இதில் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் ஜே. ரேவதி, மருத்துவ மனை கண்காணிப்பாளர் சுரேஷ் பாபு, அரசு மருத்துவக்கல்லூரி துணை முதல்வர் என். திலகவதி, குழந்தைகள் நலப் பிரிவு துறைத்தலைவர் சிவராமன், இடையிட்டு சேவை மைய துறை தலைவர் ஜெகதீஷ் குமார். நிலைய மருத்துவ அலுவலர் ராஜ்குமார், மருத்துவர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இந்திய தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி –2026 நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் துறையூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இந்திரா நகர் பகுதி, விமலா மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி மையத்தில் வாக்காளர்களுக்கு உதவிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ள உதவி மையங்களின் செயல்பாடுகளையும் மேலும் முன் நிரப்பப்பட்ட படிவங்களை மீளப்பெற்று அதனை செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வரும் பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்றொண்டு பணிகளை சிறப்பாக மேற்கொள்ள ஆலோசனை வழங்கினார்.



அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சிராப்பள்ளி திலையம்மன் படித்துறை காவிரி ஆற்றில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் வாயிலாக பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2025–26ம் ஆண்டிற்கு ஆறுகளில் நன்னீர் மீன்குஞ்சு பெருவிரலிகள் இருப்பு செய்தல் திட்டத்தில் 60000 எண்ணிக்கையிலான மீன்குஞ்சு பெருவிரலிகள் இருப்பு செய்தல் திட்டத்தினை தொடங்கி வைத்தார் இந்நிகழ்வில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குனர் பிரபாவதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கங்கா தாரிணி, திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் சாலை தவவளன், மண்டல தலைவர் மதிவாணன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குனர் குமரேசன், அரசுத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மெய்யன் தெரு பகுதியில் வாக்குச்சாவடி நிலை அலுவலரால் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் பெறப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்ட தேல்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம், பெருந்துறை, வெள்ளோடு பகுதிகளில் நடைபெற்ற வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் –2026 உதவி மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# வந்தவாசியில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா..!



வந்தவாசி, நவ 24:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி கலைஞர் முத்தமிழ் சங்கம் சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு சங்கத் தலைவர் வந்தை குமரன் தலைமை தாங்கினார். கௌரவத் தலைவர் அன்சாரி, தெள்ளாறு இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரி பொருளாளர் எஸ்.பழனிச்சாமி, எக்ஸ்னோரா நிர்வாகி மலர் சாதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க செயலாளர் முகமது ஜியா வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக, பூங்குயில் சிவக்குமார், நகர்மன்றத் துணைத் தலைவர் அன்னை க.சீனிவாசன் ஆகியோர் பங்கேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் செயல்பாடுகளையும், அவரது துறை சார்ந்த கருத்துரைகளை விவரித்து பேசினர். மேலும் பல்துறையில் சிறப்பிடம் பெற்ற தமிழ் ஆர்வலர்களுக்கு விருதுகள் வழங்கப் பட்டது. இந்த நிகழ்வில் பையூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் விஜயகுமார், தமிழ்ச் சங்க தகவல் தொடர்பாளர் கேப்டன் மு.பிரபாகரன், தலைமயாசிரியர் க. வாசு, மதிப்புறு முனைவர் எம்.பி.வெங்கடேசன், வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் பிடிஜி ஆறுமுகம், சலீம், செய்யாறு ஐடிஐ ஆசிரியர் வினோத் குமார், ஆக்ஸ்போர்டு ஸ்போக்கன் இங்கிலீஷ் மையம் கு.சதானந்தன், பட்டதாரி ஆசிரியை சாந்தி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக தென்னாங்கூர் மண்ணிசை பாடகர் பேராசிரியர் ரஜினி மற்றும் பாடகர் லாரன்ஸ் ஆகியோரின் தமிழிசைப் பாடல்கள் நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியில் சங்க பொறுப்பாளர் மனோஜ் குமார் நன்றி கூறினார்.

# கம்பத்தில் இருந்து திண்டுக்கல் வழியாக பெங்களூர் சென்ற தனியார் பேருந்து விபத்து ஓட்டுனரின் சாமத்தியத்தால் 20க்கும் மேற்பட்டோர் காயத்துடன் உயிர் தப்பினர்

## தாடிக்கொம்பு காவல் துறையினர் விசாரணை

திண்டுக்கல் நவ 24

கம்பத்தில் இருந்து திண்டுக்கல் வழியாக பெங்களூர் சென்ற தனியார் பேருந்து தாடிக்கொம்பு அருகே கட்டுப்பாட்டை இழந்து நேற்று அதிகாலை சாலையில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது ஓட்டுனரின் சாமர்த்தியத்தால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டது

உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த தாடிக்கொம்பு காவல்துறையினர் விபத்தில் சிக்கியவர்களை மீட்டு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 11 ஆண்கள் 11 பெண்கள் மற்றும் 1 குழந்தை என 23 பயணிகளுக்கு காயம் ஏற்பட்டது.

காயம் அடைந்த 23 நபர்களும் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அதில், 10 ஆண்கள் 6 பெண்கள் மற்றும் ஒரு குழந்தை சிறு காயங்கள் என்பதால் உடனடியாக சிகிச்சை முடிந்து வீடு திரும்பினர்.

இதில் பலத்த காயம் ஏற்பட்ட திண்டுக்கல் சுவாதி (30)கம்பம் தங்கம் (35)கம்பம் முத்துச்செல்வம் (28), உத்தமபாளையம் சசி பிரபா (36), கம்பம் ரேகா (27) மற்றும் தேனி குமுதா (45) ஆகிய 5 பெண்கள், 1 ஆண் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஓட்டுனரின் சாமத்தியத்தால் பல உயிர் தப்பியதால் ஓட்டுநருக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறது

இந்த விபத்துக் குறித்து தாடிக்கொம்பு காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது பேருந்து சாலையில் கவிழ்ந்து கிடந்த வீடியோ சமூகவலைத்தளங்களில் பரவி வருகிறது.

# கேள்வி கேட்ட செய்தியாளரை அடிக்கப் பாய்ந்த சீமான், வெளியே வந்த பின் நிர்வாகிகள் கொலை மிரட்டல் விடுத்து செய்தியாளரை தாக்கினர்.



புதுச்சேரியில் நாம் தமிழர் கட்சி சார்பில் மாநில நிர்வாகிகளின் கூட்டம் வில்லியனூரில் நேற்று நடைபெற்றது இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர் தொடர்ந்து செய்தியாளர் கேள்விக்கு பதில் அளித்துக் கொண்டிருந்தார்..

அப்போது குறுகிட்ட மதுரை, கோவை மெட்ரோ ரயில் தொடர்பாகவும், எஸ்.ஐ.ஆர் மற்றும் மாநில வளர்ச்சி குறித்து கேள்வி எழுப்பினார்.

அப்போது திடீரென செய்தியாளரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சீமான் செய்தியாளர் ராஜீவை ஒருமையில் பேசி அடிக்கப் பாய்ந்தார் இதனால் செய்தியாளர் சந்திப்பில் சலசலப்பு ஏற்பட்டது, மேலும் செய்தியாளரும் சீமானும் ஒருவருக்கு ஒருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு நிலவியது.

இதனை அடுத்து வெளிய வந்த செய்தியாளரை சூழ்ந்து கொண்ட நாம் தமிழர் கட்சியினர் சரமாரியாக தாக்கினார், இதனால் நாம் தமிழர் கட்சி ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பெரும் பரபரப்பு நிலவியது இதனை அடுத்து திருமண மண்டபத்தில் போலீசார் குவிக்கப்பட்டனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421